முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

திரு. சு. சே. இராஜமன்னார்.

திரு. கே. சிங்காரம்.

திரு. சா. பன்னீர்செல்வம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள் 3—10—1991 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்:

124. 1978-79 முதல் 1985-86 முடிவுள்ள காலவரைக்காக தென்னாற்காடு மாவட்டம் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தினால் செலுத்தப்பட வேண்டிய தண்டத் தொகை ரூ. 33,664-ஐ தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 31—10—1990 ஆம் நாளிட்ட 632 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1|1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

125. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8|1971) 49(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்:

143. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1991-92 ஆம்